ஓம்

சிவாதந்யந்நகிஞ்சன

ஸ்காந்தத்தில் அடங்கிய

# சிவாஷ்டோத்தரசதநாம ஸ்தோத்ரம்

பார்வத்யுவாச :-

சரீரார்தமஹம், சம்போ:, யேந, ப்ராப்ஸ்யாமிகேசவ |
ததிதாநீம் மமாசக்ஷ்வ, ஸ்தோத்ரம், சீக்ரபலப்ரதம் || 1 ||

பார்வதி கேட்கிறாள் :-

ஓ சங்கர நாராயணனே ! நான் உம்மைப்போல ஈசனின் பாதி சரீரத்தை அடையவேண்டும். அதற்கு ஸாதகமான, தாமத மில்லாமல் பயனளிக்கக் கூடிய, ஸ்தோத்ரத்தை, தயவுசெய்து எனக்கு உபதேசிக்க வேண்டுகிறேன்.

நாராயண உவாச :-

அஸ்தி குஹ்யதமம் கௌரி நாம்நாமாஷ்டோத்தரம் சதம் |
சம்போரஹம் ப்ரவக்ஷ்யாமி படதாம் சீக்ரகாமதம் || 2 ||

அஸ்ய ஸ்ரீ சிவாஷ்டோத்தரசத நாம ஸ்தோத்ரமஹாமந்த்ரஸ்ய நாராயண ரிஷி: அநுஷ்டுப் சந்த: ஸதாசிவோ தேவதா மம ஸதாசிவப்ரஸாதஸித்த்யர்த்தே ஜபே விநியோக :.

நாராயணன் சொல்லுகிறார் :-

ஓ ! பார்வதியே ! பரமசிவனிடைய 108 நாமாக்கள் அடங்கிய ஸ்தோத்ரம் ஸித்தமாக இருக்கிறது. அது மிகவும் ரஹஸ்யமானது. படிப்பவர்களுக்குத் தாமதமன்றியில் விருப்பத்தை யளிக்க வல்லது. அதை உனக்கு முதல் முதலாக உபதேசிக்கிறேன்.

இந்த சிவாஷ்டோத்தரசத நாம ஸ்துதியை முதலில் கண்டுபிடித்து வெளியிட்ட ரிஷி சங்கர நாராயணர். 32 எழுத்துக்கள் உள்ள விருத்தத்தி லமைந்திருப்பது காரணமாக, அநுஷ்டுப், என்ற சந்தஸ்ஸை உடையது. துதிக்கப்படுந் தேவதை ஸதாசிவனாவார். ஸதாசிவன் அநுக்ரஹம் கைகூடுவதற்கு ஜபம்செய்ய விநியோகிக்கப்படுவது இத்துதி.

## த்யானம்

### தேவதாத்யான ச்லோகம் :

தவளவபுஷமிந்தோர் மண்டலே ஸந்நிவிஷ்டம்
புஜகவலயஹாரம் பஸ்மதிக்தாங்கமீசம் |
ஹரிணபரசுபாணிம் சாருசந்திரார்த மௌளிம்
ஹ்ருதயகமலமத்யே ஸந்ததம் சிந்தயாமி || 3 ||

சுத்தஸ்ப்படிகம்போல வெளுப்பான சரீரம் பூண்டவரும், பூர்ண சந்த்ர மண்டலத்தில் வீற்றிருப்பவரும், வெளுத்த பாம்புகளை வளையல்களாகவும், ஹாரமாகவும், ஆபரணமாகவும் அணிந்துகொண்டிருப்பவரும், விபூதி பூசிய திருமேனி யுடையவரும், ஸகல ஜகத்துக்குத் தலைவனும், (வரதாபய முத்ரைகளுடன்) மான், கோடாரி என்ற ஆயுதம், இவ்விரண்டைக் கையில் தாங்கியவரும், அழகிய சந்திர கலையைத் தலையில் நிரந்தரமாக தரித்தவரும் ஆன பரமசிவனை, எப்பொழுதும், தாமரை போன்ற ஹ்ருதயத்தில் (நான்) தியானம் செய்கிறேன்.

---

**சிவோ, மஹேச்வர : சம்பு : பிநாகீ : சசிசேகர : |**
**வாமதேவோ, விரூபாக்ஷ :, கபர்தீ, நீலலோஹித : || 1 ||**

1) **சிவோ:** = ஸகல கல்யாண குணங்கள் நிரம்பியவர், நிர்மலமானவர், எல்லாவற்றிற்கும் இருப்பிடமானவர், மாறுதலற்றவர், இச்சாசக்திக்கு இருப்பிடமானவர், மங்களத்தை செய்பவர் முதலிய பல அர்த்தங்கள்.

2) **மஹேச்வர:** = இந்திரன் முதலிய தலைவர்களுக்கெல்லாம் பூஜிக்கத் தகுந்த ஈசுவரன், ப்ரஹ்ம, விஷ்ணு, ருத்ர மூர்த்திகளைத் தன்னிடம் அடக்கிக்கொள்ளும் திரோதான சக்தியுள்ளவர்.

3) **சம்பு:** = ஸம்ஹாரமூர்த்தியாக இருந்து விச்ராந்தி ஸுகத்தை யளிப்பவர்; ஆநந்தரூபீ, நிலையாக இருப்பவர்.

4) **பிநாகீ** = த்ரிபுரர்களை அழித்ததும், உலகங்களைக்காத்ததுமான பினாகமென்ற வில்லைக் கொண்டவர்.

5) **சசிசேகர:** = சந்திரனைத் தலையில் ஆபரணமாக அணிந்தவர், ஞானரூபீ, ம்ருதுஹ்ருதயர்.

6) **வாமதேவோ:** = அழகான தைவம், இடது பக்கத்திலுள்ள சித்சக்தியுடன் சேர்ந்து உலகைப் படைப்பவர்.

7) **விரூபாக்ஷ:** = முக்கண்ணன், உலக விலக்ஷணமான கண் முதலிய அவயங்களை உடையவர்.

8) **கபர்தீ** = கங்கையின் ப்ரவாஹத்தை, ஜடையில் தாங்கினால் சுத்தஞ் செய்தவர். பகீரதனுக்கு கங்கையை அளித்தவர், ஜடையின் முடிச்சை உடையவர்.

9) **நீலலோஹித:** = கழுத்தில் நீலவர்ணமும், மற்ற அவயவங்களில் சிவப்புமான சூரிய மண்டலாந்தர்வர்தி புருஷன், அர்தநாரீச்வரர், ப்ரக்ருதி புருஷஸமஷ்டி.

**சங்கர: , சூலபாணி: ச, கட்வாங்கீ, விஷ்ணுவல்லப: |**
**சிபிவிஷ்ட: அம்பிகாநாத: , ஸ்ரீகண்ட: பக்தவத்ஸல: || 2 ||**

10) **சங்கர:** = கல்யாணத்தைச் செய்பவர்.

11) **சூலபாணி:** = த்ரிகுணாத்மகமான சூலத்தைக் கையில் கொண்டவர்.

12) **கட்வாங்கீ** = ப்ரஹ்மஹத்யாதோஷப்ராயஸ்சித்தமாக கட்டில் காலை தரிப்பவர்.

13) **விஷ்ணுவல்லப:** = வெகுகாலம் உபாஸனை செய்த விஷ்ணுவுக்கு ஸுதர்ஸனமென்கிற சக்ரத்தைக் கொடுத்ததால் ப்ரியமானவர்.

14) **சிபிவிஷ்ட:** = பசுக்களுக்குத் தலைவன்.

15) **அம்பிகாநாத:** = கௌரீ புருஷன், ஸப்தரிஷிகளை அனுப்பி கௌரியைக் கொடுக்கும்படி பர்வத ராஜனை (இமயமலையை) வேண்டியவர். தவஞ்செய்துகௌரியையடைய விரும்பியவர்.

16) **ஸ்ரீகண்ட:** = விஷத்தைக் கழுத்தில் அடக்கியவர்.

17) **பக்தவத்ஸல:** = சண்டிகேஸ்வரர் முதலிய பக்தர்களிடத்தில் அன்புள்ளவர்.

**பவ:, சர்வ:, த்ரிலோகேச:, சிதிகண்ட:, சிவாப்ரிய: |**
**உக்ர:, கபாலீ, காமாரி:, அந்தகரஸுரஸூதன: || 3 ||**

18) **பவ:** = உலகத்தைப்படைத்தவர். உலகத்தைத் தாங்குபவர், ஸத்ரூபி.

19) **சர்வ:** = ப்ரளய காலத்தில் அனைத்தையும் அழிப்பவர்.

20) **த்ரிலோகேச:** = மூவுலகிற்கும் தலைவர்.

21) **சிதிகண்ட:** = இந்திரன் வஜ்ராயுதத்தா லேற்பட்டகருப்புவர்ணத்தை உடைய கழுத்துடன் கூடியவர்.

22) **சிவாப்ரிய:** = கௌரியிடம் அன்பு கொண்ட உமா ஸஹாயமூர்த்தி.

23) **உக்ர:** = பிறரால் அவமதிக்கமுடியாதவர், விச்வாதிகர்.

24) **கபாலீ** = ப்ரஹ்ம கபாலத்தை தரிப்பவர், கங்காலநாதர்.

25) **காமாரி:** = மன்மதனை எறித்தவர். விரக்தர்களால் அடையக்கூடியவர்.

26) **அந்தகரஸுரஸூதன:** = அந்தகன் என்ற அஸுரனை அழித்த பைரவமூர்த்தி.

**கங்காதர:, லலாடாக்ஷ:, காலகால:, க்ருபாநிதி: |**
**பீம:, பர ஸுஹஸ்தஸ்ச, ம்ருகபாணி: ஜடாதர: || 4 ||**

27) **கங்காதர:** = பிறரால் தாங்கமுடியாத கங்கையைத் தாங்கியவர்.

28) **லலாடாக்ஷ:** = நெற்றிக் கண்ணன்.

29) **காலகால:** = மார்க்கண்டேயருக்காக யமனை அடக்கியவர்.

30) **க்ருபாநிதி:** = தயைக்கு இருப்பிடமானவர்.

31) **பீம:** = அக்னி, வாயு, யமன், ஸுர்யன், இந்திரன் முதலியவர்கள் பயந்து, உத்தரவுப்படி நடக்கச் செய்பவர்.

32) **பர ஸுஹஸ்தஸ்ச** = கோடாரியைக் கையில் தாங்கியவர், ஸத்ய நிஷ்டர்.

33) **ம்ருகபாணி:** = (வேதரூபியான) மானை கையில் கொண்டவர்.

34) **ஜடாதர:** = ஜடைகளை (புண்ய நதீ ஸமுத்திரங்களை) தரிப்பவர்.

**கைலாஸவாஸீ, கவசீ, கடோர:, த்ரிபுராந்தக: |**
**வ்ருஷாங்க:, வ்ருஷபாரூட:, பஸ்மோத்தூளிதவிக்ரஹ: || 5 ||**

35) **கைலாஸவாஸீ** = கேளிகளுக்கு இருப்பிடமாகிய கைலாஸ மலையில் வசிக்கும் ஸ்வபாவ முள்ளவர்.

36) **கவசீ** = (ஸ்வாதந்த்ர்யம் என்ற) கவசம் பூண்டவர்.

37) **கடோர:** = (ஜக்த்ரக்ஷணார்த்தம்) துஷ்டநிக்ரஹத்துக்கு வேண்டிய கோரதநுவைக் கொண்டவர், பரிபூர்ணரூபி.

38) **த்ரிபுராந்தக:** = முப்புரம் எரித்தவர், ஸ்தூல, ஸுக்ஷ்ம், காரண சரீரத்ரயத்தை யழித்து விதேஹ கைவல்யத்தை யளிப்பவர்.

39) **வ்ருஷாங்க:** = தர்மரூபியான வெண்காளையைக் கொடியாகக் கொண்டவர்.

40) **வ்ருஷபாரூட:** = த்ரிபுரஸம்ஹார காலத்தில், காளை உருவங்கொண்ட விஷ்ணுவால் தாங்கப்பட்ட ரதத்தில் ஏறியவர். தர்மமாகிய வ்ருஷபத்தை வாஹனமாகக் கொண்டவர்.

41) **பஸ்மோத்தூளிதவிக்ரஹ:** = பாபங்களையும், ரோகங்களையும், மாயாபாசத்தையும் அழித்து, ஞானத்தைக் கொடுக்கும் பஸ்ம என்ற விபூதியால் உத்தூளனஞ் செய்து கொள்ளப்பட்ட உடம்பை உடையவர். இது தான் முண்டகாதி உபநிஷத்துக்களில் சிரோவிரதம் எனப்படுகிறது.

**ஸாமப்ரிய:, ஸ்வரமய:, த்ரயீமூர்தி: அநீச்வர: |**
**ஸர்வஜ்ஞ: பரமாத்மா ச ஸோம ஸூர்ய அக்னிலோசந: || 6 ||**

42) **ஸாமப்ரிய:** = ஸாமவேதத்தில் பிரியமுள்ளவர். இனிமையான வாக்கில் பிரியமுள்ளவர்.

43) **ஸ்வரமய:** = ஓம் என்ற ப்ரணவத்தால் ப்ரதி பாத்யமானவர் (அவயவார்தே, மயட்).

44) **த்ரயீமூர்தி:** = மூன்று வேதங்களை உடலாகக் கொண்டவர்.

45) **அநீச்வர:** = ஸகலத்துக்கும் தலைவனாகிய இவருக்குமேல் தலைவன் ஒருவனும் கிடையாது.

46) **ஸர்வஜ்ஞ:** = எல்லாவற்றையும் அறிந்தவர்.

47) **பரமாத்மா** = ஸகல ஜீவர்களுக்கும் அந்தர்யாமியாகிய சிறந்த ஆத்மா.

48) **ஸோம ஸூர்ய அக்னிலோசந:** = சந்திரன், ஸூரியன், அக்னி இம்மூவரையும் கண்களாக உடையவர்.

**ஹவி யஜ்ஞமய:, ஸோம:, பஞ்சவக்த்ர:, ஸதாஸிவ: |**
**விஸ்வேஸ்வர, வீரபத்ர:, கணநாத:, ப்ரஜாபதி: || 7 ||**

49) **ஹவி:** = ஹோமஞ் செய்யப்படும் அவியாக இருப்பவர்.

50) **யஜ்ஞமய:** = யஜ்ஞங்களுக்குத் தலைவன், யஜ்ஞஸ்வாமீ.

51) **ஸோம:** = உமாதேவியுடன் கூடியவர், ஸோமலதையாலாகிய க்ரதுவால் ஆராதிக்கப்படுபவர்.

52) **பஞ்சவக்த்ர:** = ஐந்து முகங்களை உடையவர்.

53) **ஸதாஸிவ:** = காலபரிச்சேத மில்லாத என்றைக்கும் நித்யமான பரமசிவன், அநுக்ரஹ மூர்த்தியான ஸதாசிவன்.

54) **விஸ்வேஸ்வர:** = எல்லாவற்றையு மடக்கி ஆள்பவர்.

55) **வீரபத்ர:** = தக்ஷயஜ்ஞ நாசத்தின் பொருட்டுப் படைக்கப்பட்ட பத்ரனென்ற வீரபுருஷன், வீரச்ரேஷ்டன்.

56) **கணநாத:** = நந்தி, பிருங்கி, மகாகாலன் முதலிய கணங்களுக்குத் தலைவன்.

57) **ப்ரஜாபதி:** = ஆயிரக்கணகான ருத்ரர்களைப் படைத்தவன்.

**ஹிரண்யரேதா:, துர்த்தர்ஷ:, கிரீச:, கிரிச: அநக: |**
**புஜங்கபூஷண:, பர்க:, கிரிதந்வா கிரிப்ரிய: || 8 ||**

58) **ஹிரண்யரேதா:** = தங்க மயமான ப்ரமாண்டத்தைப் படைத்தவர்.

59) **துர்த்தர்ஷ:** = ஒருவராலும் வெல்லமுடியாதவர்.

60) **கிரீச:** = கைலாஸ மலைக்குத் தலைவன், மலைகளனைத்துக்கும் ஸ்வாமீ, வாக்குத் தலைவன்.

61) **கிரிச:** = கைலாஸ மலையில் படுத்திருப்பவர், மேருமலையை வில்லாகக் கொண்டவர்.

62) **அநக:** = துக்கமற்றவர், பாபமில்லாதவர்.

63) **புஜங்கபூஷண:** = கருட பயத்தால் ஓடிவந்து சரண்புகுந்த வாஸுகி முதலிய பாம்புகளையும், தாருகாவன வாஸிகளான ரிஷிகள் படைத்த ஸர்பங்களையும், அணியாகப் பூண்டவர்.

64) **பர்க:** = பாபங்களை வருத்தெடுத்து அழிப்பவர்.

65) **கிரிதந்வா** = மேருமலையை வில்லாகக் கொண்டவர்.

66) **கிரிப்ரிய:** = மலையில் பிரியமுள்ளவர்.

**க்ருத்திவாஸாঃ, புராராதிঃ, பகவாந், ப்ரமதாதிபঃ |**

**ம்ருத்யுஞ்ஜயঃ, ஸூக்ஷ்மதநுঃ, ஜகத்வ்யாபீ, ஜகத்குருঃ || 9 ||**

67) **க்ருத்திவாஸாঃ** = தாருகாவனவாஸியான ரிஷிகள் படைத்த புலியைக் கொன்று, அதன் தோலை ஆடையாக அணிந்தவர், கஜாஸுரன் தோலை ஆடையாக அணிந்தவர்.

68) **புராராதிঃ** = ஸ்தூல, ஸூக்ஷ்ம, காரண சரீரங்களை அழிப்பவர்.

69) **பகவாந்** = ஐச்வர்யம் முதலிய ஆறு குணங்கள் நிரம்பியவர்.

70) **ப்ரமதாதிபঃ** = அவைதிகர்களைத் தொந்தரவு செய்யும் ப்ரமத கணங்களுக்குத் தலைவர்.

71) **ம்ருத்யுஞ்ஜயঃ** = பக்தர்களின் மரணத்தையழிப்பவர்.

72) **ஸூக்ஷ்மதநுঃ** = நுட்பமான சரீரத்தையுடையவர்; நுட்பங்களைக் காட்டிலும் நுட்பமானவர்.

73) **ஜகத்வ்யாபீ** = உலகத்தைவியாபிக்கும் ஸ்வபாவமுள்ளவர்.

74) **ஜகத்குருঃ** = உலகத்தாதாவாகியப்ரஹ்மாவுக்கு வேதம் உபதேசித்ததால், உலகத்தின் ஆதி குரு.

**வ்யோமகேஸঃ, மகாஸேநஜநகঃ, சாருவிக்ரமঃ |**

**ருத்ரঃ பூதபதிঃ, ஸ்த்தாணுঃ, அஹிர்புத்ந்யঃ, திகம்பரঃ || 10 ||**

75) **வ்யோமகேஸঃ** = ஆகாசம்போல விசாலமான ஜடையையுடையவர், ஆகாசத்தையே ஜடையாக உடையவர். (விச்வ ரூபத்தில்).

76) **மகாஸேநஜநகঃ** = ஸேநாபதியான ஸுப்பிரம்மண்யரின் தந்தை.

77) **சாருவிக்ரமঃ** = பார்வையாலும், புன் சிரிப்பாலும், கால் கட்டவிரல் கீரலாலும், அஸுரர்களை அழிப்பதால் அழகிய பராக்ரமம் படைத்தவர்.

78) **ருத்ரঃ** = ப்ரளய காலத்தில் அழச் செய்பவர், துக்கத்தையும், அதன் காரணத்தையும் அழிப்பவர், ரோகங்களை அழிப்பவர் (ஸூர்ய மண்டலாந்தர்வர்தீ, பரமசிவன்).

79) **பூதபதிः** = பூதங்களை, ஸாயங்காலத்தில் நடனஞ் செய்து, மயக்கி அடைக்கிவைத்திருப்பவர், ஸ்ம்ஸானவாஸீ உலக ஷேமத்திற்காக.

80) **ஸ்த்தாணுः** = கட்டைபோல, பட்டுப்போன மரம் போல, அசைவற்றிருப்பவர்.

81) **ஹிர்புத்ந்யः** = பாதாளத்திலிருக்கும் ஆதிசேஷன் என்கிற பாம்பு ரூபமானவர்.

82) **திகம்பரः** = திசைகளையே ஆடையாகக் கொண்டவர்.

**அஷ்டமூர்த்திः அநேகாத்மா, ஸாத்விகः, ஸுத்தவிக்ரஹः |**
**ஸாஸ்வதः, கண்டபரஸுः, அஜः பாஸவிமோசகः || 11 ||**

83) **அஷ்டமூர்த்திः** = பஞ்ச பூதங்கள், ஸுர்யன் சந்திரன், ஆத்மா (யஜ்வா) என்கிற எட்டு சரீரங்களை உடையவர்.

84) **அநேகாத்மா** = ப்ரபஞ்சத்தையே பல சரீரமாகக் கொண்டவர்.

85) **ஸாத்விகः** = ஸத்வ குணத்திலிருந்துகொண்டு உபஸம்ஹாரம் செய்பவர், ஸத்வ குணத்தைக் கொடுப்பவர்.

86) **ஸுத்தவிக்ரஹः** = ஸத்வ குணத்தை ஸரீரமாகக் கொண்டவர், ஜராமரணாதி குற்றம் (தோஷம்) அற்ற உடல் வாய்ந்தவர், அப்ராக்ருத ஸரீரம் படைத்தவர்.

87) **ஸாஸ்வதः** = எப்பொழுதும் இருப்பவர்.

88) **கண்டபரஸுः** = கஜாஸுரனைக் கொல்லும் ஸமயத்தில் சத்ருக்களைக் கொல்லவல்ல கோடாரி முறிக்கப்பட்டதால், கண்ட பரசு எனப்படுவர்.

89) **அஜः** = பிறக்காதவர்.

90) **பாஸவிமோசகः** = அவித்யா, தத்கார்ய கட்டிலிருந்து பக்தர்களான பசுக்களை விடுவிப்பவர்.

**ம்ருடः, பசுபதிர், தேவः, மகாதேவः அவ்யயः ஹரிः |**
**பூஷதந்தபித், அவ்யக்ர, தக்ஷாத்வரஹரः ஹரः || 12 ||**

91) **ம்ருட:** = ஸுகத்தைக் கொடுப்பவர்.

92) **பசுபதிர்** = பசுக்களைக் காப்பவர், பசுக்களின் தலைவர்.

93) **தேவ:** = உலகத்தைப் படைப்பது, காப்பது, முடிப்பது ஆகிய விளையாட்டைச் செய்பவர்.

94) **மகாதேவ:** = அனைவரால் பூஜிக்கப்படுவதாலும், அளவில் விபுவானதாலும், ஸர்வஜ்ஞனானதாலும், ஸர்வரக்ஷகனானதாலும் பெரிய கடவுள்.

95) **அவ்யய:** = பிறத்தல் முதலிய ஆறு, பாவ விகாரங்களில்லாதவர், ஞானம் முதலிய பத்து அவ்யயங்களை (ஆறு அங்கங்களைப்போல்) உடையவர்.

96) **ஹரி:** = பாபங்களை அழிப்பவர், விஷ்ணுவின் நாமாக்கள் சிவனைக் குறிப்பதாக ஹரிவம்சம் கூறுகிறது.

97) **பூஷதந்தபித்** = தக்ஷயஜ்ஞ விநாச காலத்தில் வீரபத்ர ரூபங்கொண்டு சூர்யனின் பற்களை உடைத்தவர்.

98) **அவ்யக்ர** = தமோ குணத்தால் கோபங்கொள்ளாதவர், தக்ஷயஜ்ஞ வினாசகாலத்தில், பக சூர்யாதிகளை தண்டித்தது, பாவம் நீங்கி சுத்தப்படுத்த அநுக்ரஹபுத்தியாலேயே, கோபத்தாலல்ல என்பது தாத்பரியம்.

99) **தக்ஷாத்வரஹர:** = தக்ஷன் யஜ்ஞத்தை நாஸம் செய்தவர்.

100) **ஹர:** = அனைத்துக்கும், விச்ராந்தி கொடுக்க விரும்பி, தனக்குள் அடக்கி, உபஸம்ஹாரம் செய்து கொள்பவர்.

**பகநேத்ரபித், அவ்யக்த: , ஸஹஸ்ராக்ஷ: , ஸஹஸ்ரபாத் |**
**அபவர்கப்ரத: , அநந்த: , தாரக: , பரமேச்வர: || 13 ||**

101) **பக நேத்ரபித்** = பகவானுடைய தக்ஷயஜ்ஞவிநாச காலத்தில் வீரபத்ரராக இருந்துகொண்டு.

102) **அவ்யக்த:** = ஸ்பஷ்டமான உருவமற்றவர், மனதுக்கும் வாக்குக்கும் எட்டாத பரமாத்மா.

103) **ஸஹஸ்ராக்ஷ:** = உலகிலுள்ள கண்களனைத்தும் அந்தர்யாமியான ஈசன் கண்கள், கணக்கில்லாத கன்களை உடையவர்.

104) **ஸஹஸ்ரபாத்** = அவ்விதமே கணக்கில்லாத அனேகம் கால்களை உடையவர்.

105) **அபவர்கப்ரத:** = மோக்ஷத்தைக் கொடுப்பவர்.

106) **அநந்த:** = கால அளவும், தேச அளவும் வஸ்து அளவும் இல்லாதவர்.

107) **தாரக:** = ஸம்ஸார ஸமுத்ரத்திலிருந்து தாண்டுவிப்பவர், அவிமுக்தோபாஸகர்களுக்கு, கடைசி காலத்தில், ப்ரணவம் என்ற மந்த்ரத்தை உபதேசிப்பவர்.

108) **பரமேச்வர:** = இந்திரன் முதலிய தேவர்களாக இருந்துகொண்டு காம்ய கர்ம பலத்தையும், நிஷ்காமகர்ம பலமாகிய முக்தியையும், ஸ்வதந்த்ரமாகக் கொடுப்பவர், பரமசிவன்.

---

பலஸ்ருதி: -

ஏததஷ்டோத்தரம், நாம்நாம், சதமாம்னாய ஸம்மிதம் |
சங்கரஸ்ய, ப்ரியா, கௌரீ, ஜப்த்வா, சம்புப்ரஸாததம் || 1 ||

த்ரைகால்யமந்வஹம் தேவீ வர்ஷமேகம் ப்ரயத்னத: |
அவாப ஸா சரீரார்தம் ப்ரஸாதாத் சூலபாணிந: || 2 ||

ய: , த்ரிஸந்த்யம், படேத்நித்யம், நாம்நாம் அஷ்டோத்தரம் சதம் |
சதருத்ர த்ரிராவ்ருத்யா யத்பலம் லபதே நர: || 3 ||

தத்பலம், ப்ராப்நுயாநித்யம் ஏகாவ்ருத்த்யா, ந ஸம்ஸய: |
ஸக்ருத்வா நாமபி: பூஜ்ய குலகோடிம் ஸமுத்தரேத் || 4 ||

பில்வபத்ரை: ப்ரசஸ்தை: ச, புஷ்பை: ச, துளஸீதளை: |
திலாக்ஷதை: யஜேத் யஸ்து ஜீவந்முக்தோ நஸம்ஸய: || 5 ||

வேதத்துக்குச் சமமான, வேதம்போல அவச்யம் படிக்கப்படவேண்டிய, வேதத்திலுள்ள நாமாக்களாளமைந்த பரமசிவன் அநுக்ரஹத்தை யளிக்க கூடிய இந்த அஷ்டோத்தர சதநாமஸ்துதியை, சங்கரர் மனைவியான கௌரி தேவி, ஒரு வர்ஷகாலம், ப்ரதிதினம், மூன்று ஸந்த்யாகாலங்களாகிய வேளைகளில், சமதமாதிஸாமக்ரியையுடன் ஜபித்தாள். அதனால் சங்கரன் அநுக்ரஹம் பெற்று, ஸம்புவின் பாதி ஸரீரத்தை யடைந்தாள். அர்த்தநாரீஸ்வரர் என வழங்கப்பட்டது. இந்த அஷ்டோத்தர ஸதநாம ஸ்துதியை, முன்று ஸந்த்யா வேளைகளினும், ப்ரதிதினம் படிப்பவன், ஸதருத்ரீய மந்த்ரத்தை மூன்று தடவை ஜபம் செய்வதாலுண்டாகும் பயனை இதின் ஒரு தடவை ஜபத்தால் அடைகிறான். ஸந்தேஹம் வேண்டாம். இந்த நாமாக்களால் ஒரு தடவை பரமசிவனை பூஜிப்பதால் கோடி குலத்தைக் கடைத்தேற்றி வைக்கமுடியும். சிறந்த பில்வபத்ரங்களாலோ, துளசீ தளங்களாலோ, புஷ்பங்களாலோ, எள்ளு கலந்த அகண்டித அரசியாலோ, பரமசிவனை பூஜிப்பவன், ஜீவந்முக்தனாவன். ஸந்தேஹம் வேண்டாம். நிச்சயம்.

முற்றிற்று.

---

# சிவாஷ்டோத்தரசத நாமாவளி :

1) ஓம் சிவாய நம:
2) ஓம் மஹேச்வராய நம
3) ஓம் சம்பவே நம:
4) ஓம் பிநாகிநே நம:
5) ஓம் சசிசேகராய நம:

6) ஓம் வாமதேவாய நம:
7) ஓம் விரூபாக்ஷாய நம:
8) ஓம் கபர்த்தினே நம:
9) ஓம் நீலலோஹிதாய நம:
10) ஓம் ஸங்கராய நம:

11) ஓம் ஸூலபாணயே நம:
12) ஓம் கட்வாங்கிநே நம:
13) ஓம் விஷ்ணுவல்லபாய நம:
14) ஓம் ஸிபிவிஷ்டாய நம:
15) ஓம் அம்பிகாநாதாய நம:

16) ஓம் ஸ்ரீகண்டாய நம:
17) ஓம் பக்தவத்ஸலாய நம:
18) ஓம் பவாய நம:
19) ஓம் சர்வாய நம:
20) ஓம் த்ரிலோகே(கீ)சாய நம:
21) ஓம் சிதிகண்டாய நம:
22) ஓம் சிவாப்ரியாய நம:
23) ஓம் உக்ராய நம:

24) ஓம் கபாலிநே நம:
25) ஓம் காமாரயே நம:

26) ஓம் அந்தகாஸுரஸூதநாய நம:
27) ஓம் கங்காதராய நம:
28) ஓம் லலாடாக்ஷாய நம:
29) ஓம் காலகாலாய நம:
30) ஓம் க்ருபாநிதியே நம:

31) ஓம் பீமாய நம:
32) ஓம் பரசுஹஸ்தாய நம:
33) ஓம் ம்ருகபாணயே நம:
34) ஓம் ஜடாதராய நம:
35) ஓம் கைலாஸவாஸிநே நம:

36) ஓம் கவசிநே நம:
37) ஓம் கடோரராய நம:
38) ஓம் த்ரிபுராந்தகாய நம:
39) ஓம் வ்ருஷாங்காய நம:
40) ஓம் வ்ருஷபாரூடாய நம:

41) ஓம் பஸ்மோத்துளிதவிக்ரஹாய நம:
42) ஓம் ஸாமப்ரியாய நம:
43) ஓம் ஸ்வரமயாய நம:

44) ஓம் த்ரயீமூர்த்தயே நமஃ
45) ஓம் அனீச்வராய நமஃ

46) ஓம் ஸர்வஜ்ஞாய நமஃ
47) ஓம் பரமாத்மநே நமஃ
48) ஓம் ஸோமஸூர்யாக்னிலோசநாய நமஃ
49) ஓம் ஹவிஷே நம்ஃ
50) ஓம் யஜ்ஞமயாய நமஃ

51) ஓம் ஸோமாய நமஃ
52) ஓம் பஞ்சவக்த்ராய நமஃ
53) ஓம் ஸதாசிவாய நமஃ
54) ஓம் விஸ்வேஸ்வராய நம;
55) ஓம் வீரபத்ராய நமஃ

56) ஓம் கணநாதாய நம;
57) ஓம் ப்ரஜாபதயே நமஃ
58) ஓம் ஹிரண்யரேதஸே நமஃ
59) ஓம் துர்தர்ஷாய நமஃ
60) ஓம் கிரீஸாய நமஃ

61) ஓம் கிரிஸாய நமஃ
62) ஓம் அனகாய நமஃ
63) ஓம் புஜங்கபூஷணாய நமஃ
64) ஓம் பர்காய நமஃ
65) ஓம் கிரிதந்வனே நமஃ

66) ஓம் கிரிப்ரியாய நம:
67) ஓம் க்ருத்திவாஸஸே நம:
68) ஓம் புராராதயே நம:
69) ஓம் பகவதே நம:
70) ஓம் ப்ரமதாதிபாய நம:

71) ஓம் ம்ருத்யுஞ்ஜயாய நம;
72) ஓம் ஸூக்ஷ்மதநவே நம:
73) ஓம் ஜகத்வ்யாபிநே நம:
74) ஓம் ஜகத்குருவே நம:
75) ஓம் வ்யோமகேஸாய நம:

76) ஓம் மஹாஸேனஜனகாய நம:
77) ஓம் சாருவிக்ரமாய நம:
78) ஓம் ருத்ராய நம:
79) ஓம் பூதபதயே நம:
80) ஓம் ஸ்த்தாணவே நம:

81) ஓம் அஹிர்புத்ந்யாய நம:
82) ஓம் திகம்பராய நம:
83) ஓம் அஷ்டமூர்த்தயே நம:
84) ஓம் அநேகாத்மநே நம:
85) ஓம் ஸாத்விகாய நம:

86) ஓம் ஸுத்தவிக்ரஹாய நம:

| | | | |
|---|---|---|---|
| 87) | ஓம் | ஸாஸ்வதாய | நமঃ |
| 88) | ஓம் | கண்டபரஸவே | நமঃ |
| 89) | ஓம் | அஜாய | நமঃ |
| 90) | ஓம் | பாஸவிமோசகாய | நமঃ |
| 91) | ஓம் | ம்ருடாய | நமঃ |
| 92) | ஓம் | பஸுபதயே | நமঃ |
| 93) | ஓம் | தேவாய | நமঃ |
| 94) | ஓம் | மஹாதேவாய | நமঃ |
| 95) | ஓம் | அவ்யாய | நமঃ |
| 96) | ஓம் | ஹரயே | நமঃ |
| 97) | ஓம் | பூஷதந்தபிதே | நமঃ |
| 98) | ஓம் | அவ்யக்ராய | நமঃ |
| 99) | ஓம் | தக்ஷாத்வரஹராய | நமঃ |
| 100) | ஓம் | ஹராய | நமঃ |
| 101) | ஓம் | பகநேத்ரபிதே | நமঃ |
| 102) | ஓம் | அவ்யக்தாய | நமঃ |
| 103) | ஓம் | ஸஹஸ்ராக்ஷாய | நமঃ |
| 104) | ஓம் | ஸஹஸ்ரபாதே | நமঃ |
| 105) | ஓம் | அபவர்கப்ரதாய | நமঃ |
| 106) | ஓம் | அனந்தாய | நமঃ |
| 107) | ஓம் | தாரகாய | நமঃ |
| 108) | ஓம் | பரமேஸ்வராய | நமঃ |

---

ஓம் தத் ஸத்ঃ